ஸ்ரீ கணேஷ புஜங்கம் தமிழில்

---------------------------------------

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

---------

௧)

நாதமுடன் இடையினிலே
ஆடும்மணி ஓசையிலே
பாதமலர் தாளமுடன்
தாண்டவமும் ஆடும் !
நாகமது மேனியிலே
ஆபரணம் ஆகும் !
ஈசனவன் திருமகனே
கணபதியே சரணம் !

கோரஸ்:
ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !
ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !

௨)

வீணையிசை கேட்டுதலை
ரசனையிலே அசையும் !
யானைமத நீரொழுக
தேனீயெலாம் மொய்க்கும் !
மாதுளையைத் தாங்குகிற
துதிக்கையது மின்னும் !
ஈசனவன் திருமகனே
கணபதியே சரணம் !

கோரஸ்:
ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !
ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !

PSDPRASAD MUSIC

***************

3)

உதிக்கும்செங் கதிர்போல்
செம்பருத்தி பூப்போல்
ஜொலிக்கும் திருமேனி
ஒளிர்ந்திடுமே சிவந்து !
பெருவயிறு, ஒருதந்தம்
வளைந்திருக்கும் துதிக்கை !
ஈசனவன் திருமகனே
கணபதியே சரணம் !

கோரஸ்:
ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !
ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !

4)

ரத்தினங்கள் பலவாய்
மின்னுகிற மகுடம் !
அத்தனைக்கும் மேலே
இளம்பிறையும் ஒளிரும் !
பிறப்பிறப்பு சுழலழிக்கும்
அணிகலனின் அணியே !
ஈசனவன் திருமகனே
கணபதியே சரணம் !

கோரஸ்:
ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !
ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !

***************

PSDPRASAD MUSIC

௫)

நடனமிடும் போதினிலே
கரம்கொடியாய் அசையும் !
இடவலமாய் இருவிழிகள்
அபிநயங்கள் செய்யும் !
சுரலோக சுந்தரியர்
சாமரங்கள் வீசும்..
ஈசனவன் திருமகனே
கணபதியே சரணம் !

கோரஸ்:
ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !
ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !

௬)

ஜொலிக்கின்ற கண்களவை
அசைந்தபடி இருக்கும் !
எளிதாக அருள்புரியும்
கருணைமிகு வடிவம் !
யோகியர்கள் துதிபாடும்
கலைகளதன் மூலம் !
ஈசனவன் திருமகனே
கணபதியே சரணம் !

கோரஸ்:
ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !
ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !

PSDPRASAD MUSIC

௭)

உள்ளோடு நிறைவான

ஓம்கார ரூபம் !

நல்லோர்கள் அடிபோற்றும்

ஆனந்த கோலம்!

மாறாத, தூயதொரு

குணம்கடந்த யோகம் !

முழுமுதலாய் ஆனவனே

கணபதியே சரணம் !

கோரஸ்:

ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !

ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !

௮)

பேரமைதி, ஆனந்தம்

ஒன்றான கோலம் !

தீராத லீலைசெய்

அண்டமிதன் மூலம் !

அகிலத்தை படைத்தழித்து

முக்தியினை அருளும்..

முழுமுதலாய் ஆனவனே

கணபதியே சரணம் !

கோரஸ்:

ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !

ஜெய் ஜெய் கணேசா ! ஜெய் ஜெய் கணேசா !

PSDPRASAD MUSIC

१)

அதிகாலைப் பொழுதில்
துதியிதனை படித்தால்
வேண்டியது நடக்கும் !
சொன்னவைகள் பலிக்கும் !
நீக்கமற நிறைந்த
கணபதியும் மகிழ்ந்து
அருள்புரியும் போது
இயலாத தேது?

இயலாத தேது? (३)

PSDPRASAD MUSIC